சாதனமாக இருப்பது வானொலிதான். நமது கோவை மாவட்டத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளக் கொடுமைபற்றி வானொலி மூலமாகச் சொல்லித்தான் பலர் தப்பித்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

New water sources in North Arcot district

*17 *Q*.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any investigation was carried out in North Arcot district to establish new water sources; and

(*b*) the number of water sources (net) that had been recommended to the Government for being established?

வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய நீர் நிலைகள்

திரு. எல். பலராமன்: *மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் புதிய நீர் நிலைகள் உண்டாக்க சோதனை செய்யப்பட்டதா?

(இ) சோதனை மூலம் நிகரமாக எத்தனை நீர் நிலையங்கள் உண்டாக்க அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: *(அ) & (இ) வட ஆற்காடு உட்பட தமிழ்நாடு முழுவதும் நிலநீர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீர் மட்ட ஏற்ற இறக்கங்கள், மண்ணியல் ஆகியவை குறித்த வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. வட ஆற்காடு மாவட்டத்தில் முழு அளவில் ஆய்வு நடத்தி நில நீர் வளம் குறித்து அறிவியல் முறையில் மதிப்பிட மூன்று ஆண்டுகள் பிடிக்கும். இருப்பினும் அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டத்தைச் செயல்படுத்த திருவண்ணாமலை, செங்கம், குடியாத்தம், திருப்பத்தூர் வட்டங்களில் மின்சார விசையேற்றங்களுடன் கூடிய சுமார் 6,000 புதிய கிணறுகளை வெட்ட நில நீர் இயக்குநர் அலுவலகம் ஏற்கனவே தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள வட்டங்களில் நிலநீர் ஆய்வு குறித்த விரிவான அறிவியல் ஆய்வுகள் முடிவுறு நிலையில் உள்ளன. விரைவான நிலநீர் அளவை நடைபெற்றுள்ளது. சுமார் 2,000 புதிய கிணறுகளை வெட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.*

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister be pleased to state whether the Government are seeking any assistance or foreign collaboration, as has been done in Rajasthan, to locate ground water resources in this State?

1973 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த நில நீர் ஆய்வுபற்றி ஏற்கெனவே ஐக்கிய நாட்டு உதவியோடுதான் மேற்கொள்ளப்பட்டது. இப்போது தனியாக நாம் ஒரு இயக்குநரை நியமித்து, அவர் மூலமாக தமிழ் நாடு பூராவும் நில நீர் வளம்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறோம்.

திரு. எல். பலராமன் : ஏற்கெனவே ஐக்கிய நாட்டு ஒத்தாசையுடன் செய்த ஆராய்ச்சி என்ன ஆயிற்று? அதனால் நம்முடைய தமிழ் நாட்டுக்குப் பொருளாதார வசதி அதிகரித்து உள்ளதா ? அது ஏன் துண்டிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் குழாய்க் கிணறுகளை இன்னும் விரிவாக்கியிருக்கிறோம் என்றெல்லாம் நீங்கள் பிரச்சாரம் செய்கிறீர்களே. அதைப் பற்றி என்ன நடவடிக்கை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். தமிழகத்தில் குழாய்க் கிணறு அமைப்பதற்கு வேண்டிய வசதியில்லாமல் இன்று பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தந்த மாவட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட அதிகாரபூர்வமான அறிக்கை இன்னும் எனக்குக் கிடைக்காத காரணத்தால், அதைப்பற்றிய விவரத்தை என்னால் சொல்ல முடியாது. இப்போது சொல்லியிருக்கும் இந்தக் குழாய்க் கிணறு போடுவதற்கான விவரம் குறித்து, தனிக் கேள்வி போட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்குப் பதில் சொல்லியிருப்பார்கள்.

Lorry accidents

*18 *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to regulate lorry traffic during nights to avoid increasing accidents ; and

(*b*) if so, the details thereof?

லாரி விபத்துக்கள்

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) லாரி விபத்துக்கள் அதிகமாவதைத் தடுக்க, இரவு நேரங்களில் லாரி போக்குவரத்தை ஒழுங்குபடுத்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?